# இலங்கையின் போரிற்கு பின்னரான அரசியல் யாப்பு வரைபு முயற்சியும் நீடித்த சமாதானமும் - ஓர் ஆய்வு

**சாம்பசிவம் ஹரிகரன்**

*University of Peradeniya*
*harikaran199011@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம் -** இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையின் தீர்வுகள் அதனை அடைந்து மோதல் சூழமைவுகளை வெற்றி கொண்டு இலங்கையை நீடித்த அபிவிருத்தி நோக்கி வேகமாக முன்னகர்வதில் காணப்பட்ட தடைகள் பற்றிய ஆய்வுகள் காலத்தின் தேவையாக அமைகின்றது. ஒரு நாட்டின் மோதல் முகாமைத்துவம் வெற்றி கொள்ளப்பட உபதேசியவாத உணர்வுகள் எப்போதுமே தடையாக அமைகின்றன.இதற்கான தீர்வுகள் முன்வைக்கபடாமல் இந்த மோதல் முகாமைத்துவ கூறுகள் வெற்றிகொள்ளப்படாத வரை சகல துறை அபிவிருத்திகளும் சாத்தியமற்ற ஒன்றாக அமைவதை வரலாற்றரசியலில் சரளமாக காண முடிகின்றது. ஒரு நாட்டின் நீடித்த அபிவிருத்தியிலும் நீடித்த சமாதானத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் விடயமாக அந்த நாட்டில் ஆழமாக வேஷரூன்றியிருக்கும் உபதேசியவாத சிந்தனைவாதத்தின் எழுச்சியையே கூற முடியும் அந்த வகையில் கடந்த பல நூற்றாண்டுகாலமாக இலங்கையில் வேஷரூன்றிய இந்த சிந்தனைவாதமே இலங்கையின் அமைதிக்கும் அதன் பொருளாதார சமூக அரசியல் கலாச்சார முன்னேற்றத்திற்கும் பெரும் சவாலை ஏற்படுத்தியது குறிப்பாக போரிற்கு பின்னரான நிலைமாறு காலமாகிய இக்காலத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் இடைக்கால அறிக்கை வழி நடத்தல் குழு அறிக்கைகள் என்பன இலங்கையின் நீடித்த சமாதானத்தில் ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்துமா அதனூடாக அடையப்படும் முயலும் யாப்பு சீர்திருத்தம் மோதல் நிலைமாற்றத்தை ஏற்படுத்தும் அளவுக்கு பலம் மிக்கதாக அமையுமா நிகழ்கால சர்வதேச அரசியல் உள்ளூர் அரசியல் சூழமைவுகளுக்கு மத்தியில் அதனை அடைய முடியுமா போன்ற விடயங்களினை ஆய்வுக்குட்படுத்தி அதனூடான ஆய்வு முடிவொன்றை முன்வைப்பது பொருத்தமானது என கருதுகின்றேன் இந்த ஆய்வுப்பரப்பின் உரைகல்லாக மோதல் முகாமைத்துவத்தின் கோட்பாட்டு முறைமைகள் சர்வதேச வரலாற்றரசியல் நடைமுறைசாத்தியமான சமகால அரசியல் போக்குகள் கடந்த கால தீர்வு முயற்சிகள் அவை அடைந்த இலக்குகள் போன்ற விடயங்களூடான ஆய்வாகவே இந்த ஆய்வின் பார்வை அமையும் இலங்கையின் நீடித்த ஒரு அரசியல் கலாசார வெற்றியென்பது மோதலை சீர்செய்வது அல்லது மோதல் தடுப்பு என்பதுடன் மாத்திரம் நின்று விடாது அதன் பரிணாமம் நோக்கி பயணிக்க வேண்டிய தேவையில் அது சாத்தியமா என்பதை ஆய்வுக்கட்டுரை தீவிரமாக அணுகும். நிலைமாறுகாலத்தில் மோதல் சூழமைவு வெற்றிகொள்ளப்பட வேண்டுமாயின் நிலைமாறு கால நீதிப்பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் குறிப்பாக உண்மையை கண்டறிதல் பொறுப்புக்கூறுதல் நீதியை பெற்றுக்கொள்ளுதல் என பலவிடயங்கள் சம நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சூழல் காணப்படுகின்றது சர்வதேச கோட்பாட்டரசியல் மோதல் தடுப்பினூடாக மோதல் முகாமைத்துவத்திற்கு நகர நிலைமாறுகால நீதி பொறிமுறை வாய்ப்பை ஏற்படுத்தும் என கூறப்பட்டு வரும் நிலையில் சம கால முயற்சிகளில் அதற்கான வாய்ப்புகள் காணப்படுகிறதா என்பதும் ஆய்வுப்பொருளாக அமைகின்றது இவ்வாய்வானது நிலை மாறுகாலத்தின் பொறுப்புக்கூறல் உண்மையை கண்டறிதல் என்பவற்றின் ஊடான நகர்வுகள் வெற்றியளிக்குமா அதற்கு வரைபு முயற்சிகள் எத்தகைய தாக்கத்தை செலுத்த முடியும் என்பது பற்றிய பார்வையாகவும் அமையும்

**திறவுச்சொற்கள் -** நீடித்த சமாதானம் அரசியல் தீர்வு ஃமோதல் முகாமைத்துவம்

## I. ஆய்வின் நோக்கம்

இலங்கையின் முப்பது ஆண்டு கால போரின் பின்னர் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தீர்வினை முன்வைத்து நீடித்த சமாதான மொன்றை கட்டமைக்க வேண்டிய சூழல் அவசரமாக ஏற்பட்டுள்ளது . இந்த நிலையில் புதிய வரைபு முயற்சிகளை ஆய்வியல் ரீதியில் பகுத்துணர்ந்து அறிவியல் ரீதியில் சாத்தியமான வழியினை தேடுதல் அவசியமானது. சர்வதேச நாடுகள் இத்தகைய சூழலை எதிர்கொள்ள கட்டமைத்து கொண்ட வழிமுறைகள் வரலாற்றின் மூலமாக கற்றுக்கொண்டபாடங்களை அடிப்படை யாக கொண்டு ஆராயும் ஆய்வொன்றை முன்வைப்பது அவசியம் என கருதுகின்றேன்.

## II. ஆய்வுக்கான கருதுகோள்

புதிய அரசியல் யாப்பு வரைபு முயற்சிகள் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சாத்தியமான வழியை முன்வைத்தது.

## III. ஆய்வு முறையியல்

இரண்டாம் நிலை தரவுகளை அடிப்படையாக கொண்டு விபரண ரீதியாக ஆய்வாக மேற்கொள்ளப்படுகின்றது. இதில் அவதானிப்பு, கண்டறிதல், வரலாற்று அனுபவம் என்பன முறையியல்களாக பிரயோகப்படுத்தப்படுகின்றது

## IV. ஆய்வு அறிமுகம்

இலங்கையின் நீடித்த அபிவிருத்தி சமாதானம் ஜனநாயகம் என்பன வெற்றி கொள்ளப்படாததற்கான பிரதான காரணமாக இலங்கையின் பெருந்தேசியவாத உபதேசியவாத சிந்தனைவாதத்தின் எழுச்சியையே கூறமுடியும். இந்தசூழமைவில் இலங்கையின் நீடித்த அமைதியை தர்ப்பதில் துணைபுரியும் இந்த தேசியவாத சிந்தனை தகர்ப்புக்கு உபதேசியவாத சிந்தனைக்கு அப்பால் தாக்கத்தை ஏற்படுத்தும் விடயங்களாக காலாதிகாலமாக பலவிடயங்கள் செல்வாக்கு செலுத்தி வந்திருக்கின்றன. அவற்றை வெற்றி கொண்டே இலங்கை சமாதானம் நோக்கி நகர வேண்டிய மிக அவசிய தேவையொன்றாக மாறியிருக்கிறது.

இலங்கையில் இன முரண்பாடு வளர்ச்சியுற்று அது மோதலாக இனவன்முறையாக மாறியது தவிர்க்க முடியாத அரசியல் பிரக்ஞை ஆகும்.

இதன் காரணங்களாக பூகோள ராஜதந்திர அரசியலும் பிராந்திய நாடுகளின் வல்லாதிக்க விரிவாக்க தேவைகளையே காண முடிகின்றது. இதுவே உள்ளூர் அரசியல் தேவைகளாகவும் அமைந்துள்ளது. இந்து சமுத்திர பிராந்தியத்தில் வல்லாதிக்க விரிவாக்க தேவைகளுடேயே இலங்கையில் ஊறிப்போன உபதேசிய சிந்தனையும் சமாதானத்தில் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது.

இவற்றை வெற்றி கொள்ளுதலில் அறிவியல் ரீதியில் ஏற்பட்ட சவால்களே இலங்கையின் நீடித்த சமாதானம் அமைதி என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தியது இதுவே முப்பது ஆண்டு காலமாக இலங்கை நீடித்த போர் ஒன்றை சந்தித்து அதன் துயரத்தை அனுபவித்து வருகின்றது. அத்துடன் பிராந்திய அதிகார வல்லாதிக்க விரிவாக்க குழிக்குள் விழுந்து தடுமாற காரணமாக அமைகிறது.

இந்த நிலையில் போரிற்கு பின்னரான நிலைமாறு காலப்பகுதியில் இந்த சகதிக்குள் இருந்து மீண்டெழுந்து தன்னை கட்டமைத்து கொள்வது அவசியமானது இது மட்டுமன்றி ராஜ தந்திர அரசியலுக்கு நடுவில் புறவெளி தாக்கங்கள் அதன் நோக்கங்களுக்கு நடுவில் அவற்றை எதிர்கொண்டு மீள் கட்டுமானம் , துரித அபிவிருத்தி என்பவற்றை கட்டமைக்க கூடியதும் அறிவியல் யுகத்தை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயமும் தவிர்க்க முடியாமல் ஏற்பட்டுள்ளது. இதற்கான வழிமுறைகள் யாவை இதற்காக எத்தகைய பொறிமுறைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பன தொடர்பிலான பரந்து பட்ட ஆய்வொன்று முன்வைத்தல் பூரணமான ஆய்வாக அமையும்.

ஒருநாட்டின் மோதல் முகாமைத்துவம் என்பது மோதல்தடுப்புடன் மாத்திரம் முற்றுபெறுவதல்ல .அது கோட்பாட்டியலில் பல்வேறு படிநிலைகளை கொண்டது. அது தனது இறுதி இலக்கை அடையுமாக இருந்தால் தான் பூரணமான மோதல்முகாமைத்துவம் என்பது சாத்தியமானதாக அமையும் அந்தவகையில் தற்போதய நிலைமாறு காலத்தில் எடுக்கப்படும் அரசியல் யாப்பு வரைபு முயற்சிகளும் இதர முயற்சிகளும் அந்தமுறைகளோடு பொருந்தி வருகின்றனவா என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும் வரலாற்று ரீதியாக நீண்ட பின்னணியை கொண்ட ஒரு முரன்பாட்டு வளர்ச்சியை மீள்பார்வைக்கு உட்படுத்தி முன்வைக்க முடிகின்றது.

மோதல் முகாமைத்துவம் வெற்றி கொள்ளப்படுதலில் நிலைமாறு கால நீதி பொறி முறையின் உருவாக்கமும் வளர்ச்சியும் நடைமுறைப்படுத்தலும் பிரதான செல்வாக்கை செலுத்துகின்றது உலக அரசியல் வரலாறுகளில் இதனை அனைவரும் தெளிவாக தரிசிக்க முடியும் நிலைமாறு கால நீதிப்பொறிமுறையின் கூறுகளான உண்மையைக் கண்டறிதல் ,பொறுப்புக்கூறுதல், இழப்பீடுவழங்குதல், காயங்களை ஆற்றுதல் ,சமூக கட்டமைப்பை மீளுருவாக்கம் செய்தல் என ஒருபடிநிலையும் மறுபக்கதில் முரண்பாட்டிற்கு காரணமான தேசியஇனஅங்கீகாரம் சுயநிர்ணயஉரிமை உறுதிப்படுத்தல் சந்தேகங்களைகளைதல் மோதல்விளைவுகளைசீர்செய்தல் ஆகியவற்றை வரைபுகள் ஊடாகவும் சம நேரத்தில் சீர் செய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளது.

**அரசியல் யாப்பு வரைபு**

தற்போது எமது நாட்டினை பொறுத்த வரையில் புதிய அரசியல் யாப்பு வரைபு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன சுய நிர்ணய உரிமை கோட்பாட்டின் வழியாக அதிகாரங்களை பகிர்ந்து தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வினை முன்வைப்பதன் மூலம் நாட்டின் மோதல் நிலைமைகளை சீர்செய்து அபிவிருத்தியின் திசையில் நாட்டினை அபிவிருத்தியின் திசையில் நாட்டினை கட்டமைத்து கொள்ளுதல் அடிப்படை தேவையாகிறது. அதன் மூலமாகவே சிதைந்து போன பொருளாதார கட்டமைப்பை சீர்செய்தல் முக்கியமானது. மறுபக்கத்தில் ஜனநாயக உறுதிப்படுத்தல் முயற்சிகள், நிலைமாறு காலத்துக்கு ஏற்றவாறான நீதிப்பொறிமுறைகள் ஏற்படுதல் என்பன முழுமையாக முன்னெடுக்கப்படுதல் தேவையான ஒன்றாகும். அத்துடன் பாதிக்கப்பட்ட சமூகங்களின் உள்ளடக்கங்களை உணர்வுகளை அறிந்து அவைசீர் செய்ய வசதியானதாக யாப்பு உருவாக்க முயற்சிகள் அமைதல் மிக முக்கியமானதாக அமைகின்றது.

அத்துடன் அரசியல் யாப்பு வரைபு உருவாக் கத்தின் ஆரம்ப கட்டங்கள் முன் மொழிவுகள் என்பவற்றின் மீது தீவிர கவனம் செலுத்துவதோடு அதனை அமுல் செய்வதற்கான புறச்சூழலை உருவாக்குவது இனப்பிரச்சினை தீர்வுக்குரிய சாத்தியமான வழியாக அமைகின்றது.

போரின் பின்னர் எட்டு வருடங்கள் கடந்து தீர்வு நோக்கிய முயற்சியின் ஆரம்ப கட்டங்களாக இடைக்கால வழி நடத்தல் குழு அறிக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த உள்ளடக்கங்கள் இலங்கையின் பன்மைத்துவம் மீது தாக்கத்தை ஏற்படுத்திய ஒற்றையாட்சி கட்டமைப்புக்கு அப்பால் நகர்கின்றது என்ற வாதம் பலராலும் முன்வைக்கப்படுகின்றது.

**ஆய்வு**

இலங்கையின் இரு பிரதான கட்சிகள் தென்னிலங் கையில் ஆட்சி பீடமேறியதன் பின்னர் முன்னெடுக்கப்பட்டு வரும் யாப்பு சீர்திருத்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தீர்வு நோக்கிய நடவடிக்கை மத்திய ஸ்தானத்தை தொட்டு விட்டதாகவும் கூறி வரும் நிலையில் இடைக்கால அறிக்கை வழி நடத்தல் குழு அறிக்கை என்பவற்றை ஆதாரமாமக கொண்டு அளவிட முனையும் மரபு காணப்படுகின்றமை தெளிவாகின்றது.

அதாவது பாராளுமன்றம் அரசியலமைப்பு பேரவையாக மாறியதன் பின்னர் ஆறு உபகுழுக்களின் அறிக்கை வெளியாகியிருந்தன. இதில் முக்கியமான சில அறிக்கைகள் ஆய்வுக்கு பயன்படுத்தப்படுவது தவிர்க்க முடியாததாய் அமைகின்றது.

**சிறுபான்மை சமூகத்தினுரிமை**

குறிப்பாக மனித உரிமை தொடர்பான உபகுழு அறிக்கை பெருந்தேசியத்தில் இருந்து சிறுபான்மை சமூகத்தின் உரிமைகளை பாதுகாக்கும் அளவுக்கு பலம் அற்றது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

தமது உரிமைகள் எதிர்காலத்தில் கடந்தகாலங்களை போன்றுமீறப்படலாம் என்ற அச்சத்தை சிறுபான்மை சமூகத்திடம் ஏற்படுத்தியுள்ளதுஅத்தகைய நிலையில் அவர்களின் அச்சங்களை இல்லாது ஒழிக்கும் வகையில் வரையப்படவேண்டும் புதியயாப்பு என்பது சிறுபான்மை சமூககங்களின் மத்தியில் தொடர்ச்சியான அச்சத்தை ஏற்படுத்துமாக இருந்தால் அது இலங்கையின் பன்மைத்துவத்திற்கும் நீடித்தசமாதானத்திற்குமுரிய வாய்ப்பினையே மறுதலிக்கும் அம்சங்களாகஇருக்கும் என்ற வாதம் தவிர்க்க முடியாததாகும். இத்தகைய சிறிய அச்சங்களை களைவதில் கூட வழி நடத்தல் குழு தவறிவிட்டது என்பது சிறுபான்மை சமூகத்தின் ஒருமித்த கருத்தா உள்ளது. ஆனாலும் நுணிகி ஆராய்ந்தால் அது அச்சம் களைதலில் குறைந்தளவில் தீர்வினை தந்துள்ளது எனலாம் .

எமது நாட்டின் இனப்பிரச்சனை தொடர்பிலான ஆரம்பகட்ட அறிக்கையாக வழிப்படுத்தல்குழுவின் இடைக்கால அறிக்கையையே சொல்லமுடியும் ஏனெனில்அந்த அறிக்கை சுயநிர்ணய உரிமை கோரிக்கை வலியுறுத்தும் நாட்டின்மிக முக்கிய அம்சங்களான அதிகாரபகிர்வு, நிர்வாக முறைமை என்பவற்றை வெளிப்படுத்தும் அறிக்கையாக அமைகின்றது குறிப்பாக இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தீர்வாக சமஸ்டி ரீதியிலான அதிகாரபகிர்வு வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில் இடைக்கால அறிக்கை அதன் எல்லைகளை, ஆட்சிமுறைமை, அதிகாரபகிர்வு கோட்பாட்டு முறைமை, நிர்வாக முறைமை என்பவற்றை வெளிப்படுத்தும் அறிக்கையாக அமைகின்றது குறிப்பாக இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தீர்வாக சமஸ்டிரீதியிலான அதிகாரபகிர்வு வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில் இடைக்கால அறிக்கை அதன் எல்லையை அளவிட முடியும் அதிகார பகிர்வு பரவலாக்கம் பற்றிய பொறிமுறைமை குறிப்பாக ஒற்றையாட்சி என்பது பன்மைத்துவம் மிக்கநாட்டின் தீர்வாக ஒருபோதும் அமையாது ஒருநாட்டின் மோதல்முகாமைத்துவம் சீர்செய்யப்பட அதிகாரங்கள் யாப்பியல் ரீதியாக பகிரப்படவேண்டும் என்பதுநவீனமோதல்முகாமைத்துவத்தினை வெற்றிகொண்டு பன்மைத்துவத்தினை உறுதிப்படுத்திய நாடுகளுக்கான சான்றாதாரமாக கொள்ளமுடியும் .இதற்கு சர்வதேசநாடுகள் பயன்படுத்தும்சொற்றொடராக சமஸ்டி என்ற சொற்றொடரையே கூறமுடியும். இதன் எல்லைகள் மாறுபடுமே தவிர மத்தியால் திருப்பி எடுக்கமுடியாததும் மத்தியால் தலையிட முடியாத வகையில் அதிகாரம் பகிரப்பட்டால் அது சஸ்டி என்பது சமஸ்டிபற்றிய கோட்ப்பாட்டு ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது. ஆகவே இடைக்கால அறிக்கை அதன் எல்லைகளை தொடுகின்றது நோக்கப்படவேண்டியதாக அமைகின்றது.

**மனித உரிமை உறுதிப்படுத்தல் பொறிமுறை**

புதிய அரசியலமைப்பின் உபகுழுக்களின் பரிந்துரை அறிக்கையின் படி மனிதஉரிமைகள் சரத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்போவதாகவும் இதனூடாக ஜனநாயகத்தின் உறுதிப்பாட்டை பலமிடப்போவதாகவும் கூறிவந்தாலும் புதியஅரசியலமைப்பு அதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவது அவசியமாகும்.

குறிப்பாக பொதுமக்கள் கருத்தறியும் குழுவின் அறிக்கை பின்வருமாறு கூறுகின்றது.

தேசத்திற்கான எதிர்கால நம்பிக்கை சாட்சியை உருவாக்கும் விடயத்தில் அரசியல் சந்தர்ப்பவாதங்களுக்கு அப்பால் சென்று சென்று எதிர்கால சந்ததியினருக்கு எதனை விட்டு செல்ல உள்ளோம் என்ற வினாவை எம்முள் எழுப்புதல் வேண்டும் தவற விடப்பட்ட சந்தர்ப்பங்கள் தோல்வியடைந்த சந்தர்ப்பங்கள் பெருமை கொள்ளப்படக்கூடிய ஒன்றா என்ற வினாவின் அடிப்படையில் நீதி சமத்துவத்தை உறுதி செய்து கொண்டு மேலும் வலுவுள்ள ஜனநாயகத்தை கட்டி எழுப்புதல் அரசியலமைப்பு பேரவையில் விவாதிக்கப்பட வேண்டும் என கூறுகின்றது எனவே மேற்குறிப்பிடப்பட்ட வகையில் பொறுப்புக்கூறலின் அடிப்படையில் புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டாலே தீர்வொ சாத்தியமாகும் எனலாம் ஆனாலும் அவ்வாறான பொறிமுறையின் கீழான புதிய யாப்பு முயற்சிகள் அமையவில்லை என்பது அதன் பலவீனமாக அமைகின்றது.

புதிய அரசியலமைப்பின் உபகுழுக்களின் பரிந்துரை அறிக்கையின் படி மனித உரிமைகள் சரத்தில் மாற்றங்கள் கொண்டுவரப் போவதாகவும் இதனூடாக ஜனநாயகத்தின் உறுதிப்பாட்டை பலமிடப்போவதாகவும் கூறிவந்தாலும் புதிய அரசியலமைப்பு அதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவது அவசியமாகும்.

குறிப்பாக பொதுமக்கள் கருத்தறியும் குழுவின் அறிக்கை பின்வருமாறு கூறுகின்றது. தேசத்திற்கான எதிர்கால நம்பிக்கை சாட்சியை உருவாக்கும் விடயத்தில் அரசியல் சந்தர்ப்பவாதங்களுக்கு அப்பால் சென்று சென்று எதிர்கால சந்ததியினருக்கு எதனை விட்டு செல்ல உள்ளோம் என்ற வினாவை எம்முள் எழுப்புதல் வேண்டும் தவற விடப்பட்ட சந்தர்ப்பங்கள் தோல்வியடைந்த சந்தர்ப்பங்கள் பெருமை கொள்ளப்படக்கூடிய ஒன்றா என்ற வினாவின் அடிப்படையில் நீதி சமத்துவத்தை உறுதி செய்து கொண்டு மேலும் வலுவுள்ள ஜனநாயகத்தை கட்டி எழுப்புதல் அரசியலமைப்பு பேரவையில் விவாதிக்கப்பட வேண்டும் என கூறுகின்றது எனவே மேற்குறிப்பிடப்பட்ட வகையில் பொறுப்புக்கூறலின் அடிப்படையில் புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டாலே தீர்வொ சாத்தியமாகும் எனலாம் ஆனாலும் அவ்வாறான பொறிமுறையின் கீழான புதிய யாப்பு முயற்சிகள் அமையவில்லை என்பது அதன் பலவீனமாக அமைகின்றது.

புதியஅரசியலமைப்பின் உபகுழுக்களின் பரிந்துரை அறிக்கையின் படிமனிதஉரிமைகள் சரத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்போவதாகவும் இதனூடாக ஜனநாயகத்தின் உறுதிப்பாட்டை பலமிடப்போவதாகவும் கூறிவந்தாலும் புதியஅரசியலமைப்பு அதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவது அவசியம். அதாவது நடைமுறை அரசியலமைப்பின் பத்து தொடக்கம் பதினான்கு வரையானஉறுப்புரைகள் அடிப்படை உரிமைகள் பற்றிகூறியபோதிலும் பதினான்கு ஒன்று) இன்கீழ்வரும் மட்டுப்பாடுகள் அடிப்படை உரிமைகளுக்கு அப்பால் அரசநிர்வாக கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு படையினருக்குரிய சுதந்திரங்களை அள்ளி வழங்குகின்றது அந்தவகையில் நாட்டின் தேசியபாதுகாப்பு பொதுஒழுங்கு ஸ்திரத்தன்மை பொருளாதாரநலன் என்பவற்றை காரணம்காட்டி மட்டுப்படுத்தப்படலாம் என கூறுவதன் ஊடாக அரசபடைக்கட்டமைப்பு பொலிசாருக்கான அதிகாரங்களை மறைமுகமாக வழங்குகின்றது குறிப்பாக மனித உரிமை ஆணைக்குழு 1996 ஆம் ஆண்டின் மனித உரிமை சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும் 19 ஆம் சீர் திருத்தத்தின் கீழ் வலுப்படுத்தப்பட்டாலும் அது இன்று வரை கோப்புகளை பேணும் அளவிற்கே அதன் பலமமைந்துள்ளது. இதனால் சிறுபான்மை சமூகங்களின் மனித உரிமை மீறல் சார் விடயங்களில் உண்மையை கண்டறிதலும் அச்சத்தை களைதலும் சவாலுக்குரியதாக உள்ளது. . புதிய மனித உரிமைகள் அறிக்கை அவ்விடயம் அவ்விடயத்தில் கவனமெடுக்காமை நிலைமாறு நீதிப்பொறிமுறைக்கான சவாலை ஏற்படுத்தியுள்ளதாக நீக்கப்படுகின்றது.

மறுபக்கத்தில் சட்டமாஅதிபர் திணைக்களம், தேர்தல்கள் ஆணையாளர் விசேடசந்தர்ப்பங்களில் ஆயுதம்தாங்கியபடையினர் ஆகியோருக்கான சுதந்திரங்கள் ஜனநாயகத்தை தொடர்ச்சியாக மலினப்படுத்தி வருகின்றன. குறிப்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கான சுதந்திரங்கள் பற்றிய விடயங்கள் புதிய அரசியல் சீர்திருத்தத்ஹ்டில் பேசப்படாமை அப்பாவி சிறுபான்மை இளைஞர்கள் சிறைக்குள் வைக்கப்பட்டிருக்க வாய்ப்பை ஏற்படுத்ஹ்டுகின்றது அதனால் அது நல்லிணக்கம் மீது பாரிய சவாலை ஏற்படுத்துகின்றது. புதிய

அரசுதகவல் அறியும்சட்டமூலம் கருத்துவெளிப்பாட்டு சுதந்திரத்தின் மைல்கல் என வர்ணித்தாலும் அச்சட்டமூலத்தில் காணப்படும் மட்டுப்பாடுகள் தேசியபாதுகாப்பை காரணமாக காட்டுவதால் எப்படி கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தின் மைல் கலலாக தகவல் அறியும் சட்டமூலம் அமையும் என்ற சந்தேகம் எழுகின்றது இந்தநிலையில் அனைத்து மட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டு திருத்தங்கள் மாற்றங்கள் கொண்டுவராமல் ஜனநாயகத்தின் உறுதிப்பாட்டுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வினை எப்படி அடைய முடியும் என்ற இயல்பான சந்தேகம்எழுகின்றது.

இடைக்கால அறிக்கையில் அதிகாரபகிர்வு பற்றிய கருத்துபின்வருமாறு பதிவுசெய்யப்படுகின்றது" சிறிலங்கா அரசியலமைப்பில் குறிப்பிடத்தக்கவாறு தத்துவங்களை பிரயோகிப்பதற்கு ஏற்புடையதான மத்திய மாகாணங்களின் நிறுவனங்களை கொண்டுள்ள சுதந்திரமும் தன்னாதிக்கமும் கொண்டுள்ள எகிய இராஜ்ஜிய ஒருமித்தநாடு எனும் குடியரசாகும் என குறிப்பிடப்பட்டுள்ளமையும் மாகாணங்கள் அதிகாரப்பகிர்வின் முதல்நிலை அலகாக குறிப்பிடப்பட்டமையும் அதிகாரபகிர்வு எத்தகைய கோணத்தில் கையாளப்படுகின்றது என்பதை வெளிப்படுத்துகிறது இதன்மீது அழுத்தத்தை பிரயோகிக்கும் உறுப்புரயாக பின்வரும் உறுப்புரைகுறித்த வழிபடுத்தல் குழுவின் உபகுழு அறிக்கையில் வரையறுக்கப்பட்டுள்ளது "அதிகாரபகிர்வு மற்றும் அடிப்படைஉரிமைகள் உள்ளடங்கலாக அரசியலமைப்பு தொடர்பான அடிப்படைஅம்சத்தை திருத்தியமைப்பதற்கு நாடிநிற்கும் அரசியலமைப்பு திருத்தங்கள் மேலதிக அரசியலமைப்பு வழிமுறைகள் நீங்கலாக நிறை வேற்றமுடியாது போகலாம் என கூறப்பட்டிருக்கின்றமையும் சமஸ்டிக்குரிய ஒரு பண்பான மத்திய அரசின்தலையீட்டை கட்டுப்படுத்தும் அம்சமாக பார்க்கமுடியும்.

குறிப்பாக மாகாணங்கள் இந்த அதிகாரபகிர்வின் முதல்நிலை அலகாக குறிப்பிடப்பட்டிருப்பது அதிகாரபகிர்வாகவே நோக்கமுடியும். ஆனாலும் குறித்த மாகாண மத்தியஅரசின் அதிகாரங்கள் பட்டியல்படுத்தி நோக்கப்படவில்லை குறிப்பாக தேசியவளங்கள் அரசகாணிகள் துறைமுகங்கள் பொதுசுரங்கம் என்பன மத்திய அரசுக்குரியஅதிகாரமாகவே கொள்ளப்பட்டுள்ளமை விமர்சனக்கண்கொண்டு பார்க்கப்பட வேண்டியது . குறிப்பாக மதம் பற்றிய உறுப்புரை பெருந்தேசியவாத சிந்தனைக்கு வலுச்சேர்ப்பதை காணமுடிகின்றது இதுபலவீனமான நிலையாகும்.

ஒருநாட்டில் மதசார்பின்மை உறுதிப்படுத்தப்பட்டாலே அந்தநாட்டில் ஜனநாயகத்தின்வெற்ற உறுதியாகும் இந்தகருத்துக்கள் மாட்டின்லூதர்கிங் போன்ற சீர்திருத்தவாதிகளாலும் பல்வேறு அரசியல்சார் ஆய்வாளர்களாலும் கடந்தகாலங்களில் தெளிவாக உலகிற்கு உணர்த்தப்பட்டு இருந்தன ஆனால் இலங்கை இன்னும் மதம் ஒன்றை சார்ந்து இயங்குவதாகவே அமைகிறது அதாவது 1972 ஆம்ஆண்டு கொண்டுவர்ப்பட்ட அரசியலமைப்பிலும் இப்போது நடைமுறையில் இருக்கின்ற 1978 இல்கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்பிலும் இடைக்கால அறிக்கையிலும் ஒரேவார்த்தையே காணப்படுவது சவாலை ஏற்படுத்துகின்றது. ஏனெனில் மதவாதத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் பௌத்தமதத்திற்கு கொடுக்கப்பட்ட அளவுக்கதிகமான முக்கியத்துவம் இலங்கையின் ஜனநாயகத்திற்கு சவாலை ஏற்படுத்தியிருந்தது இப்போதய அரசியல் அமைப்பின் அத்தியாயம் இரண்டில் உறுப்புரை ஒன்பதின் படி இலங்கை குடியரசில் பௌத்தமதத்திற்கு முதன்மைதானம் கொடுக்கப்படுவதோடு அதற்கிணங்க அரசியலமைப்பின் 10 ஆம் 14 ஆம்உறுப்புரையில் வழங்கப்படுகின்ற எல்லா உரிமைகளை எல்லாமதங்களும் காப்புறுதிசெய்யப்படும் அதேவேளை பௌத்தசாசனத்தை பாதுகாத்தலும் பேணுதலும் அரசின்தலையாய கடமையாகும் எனகூறப்படுகின்றது அதேசரத்து இடைக்கால அறிக்கையிலும் கூறப்பட்டிருக்கின்றமை பன்மைத்துவத்திற்கு சவாலை ஏற்படுத்தும் விடயமாக நோக்கமுடியும்.

அத்துடன் நடைமுறைப்படுத்தலிலும் இது சவாலை ஏற்படுத்துகின்றது இலங்கையில் ஊறி ஆழமாக வே'ரூன்றி இருக்கும் இனவாத சிந்தனைகளை உடைத்துக்கொண்டு குறித்த யாப்புமாற்றத்தை அடைவதும் சவாலனாதாக படுகின்றது. மாறிவரும் பூகோள ராஜதந்திர அரசியலும் இந்து சமுத்திரபிராந்தியத்திற்கான அதிகார போட்டியும் புதியயாப்பு உருவாக்கத்தில் செல்வாக்கு செலுத்தினாலும் அதன் கோணங்கள் மாற்றமடையும் சவாலான ஒரு சூழல் ஏற்படும் என்பது ஆய்வாளர்களினதும் அரசியல் சிந்தனையாளர்களின் கருத்தாகவும் கொள்ளமுடியும்.

மறுபக்கத்தில் நிலைமாறு காலநீதி பொறி முறையின் படி உண்மையை கண்டறியவும் பொறுப்புக்கூறல்களை ஏற்படுத்தவும் ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்டிருந்தாலும் அவை பலவீனமான நிலையிலேயே உள்ளது குறிப்பாக காணாமல் போனோர் தொடர்பிலான ஆணைக்குழு உண்மையை கண்டறியும் ஆணைக்குழு என்பன தொடர்பான சட்டமூலங்களிலும் மத்திய அரசின்சிலகட்டமைப்புகளை பாதுகாக்கும் மறைமுக பொறிமுறைகள் காணப்படுகின்றமை யதார்த்த அரசியலின் பலவீனமாகும். அத்துடன் மாறிவரும் உள்நாட்டு அரசியல் மாற்றங்களும் ஆட்சி அதிகாரத்தின் இருப்பிற்காக தூண்டப்படும் பெருந்தேசிய வாதசிந்தனை உபதேசியவாத சிந்தனைகளும் இலங்கையின் பன்மைத்துவத்திலும் நீடித்த சமாதானத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதாக கூறமுடியும்.

எனவே யாப்பியல் திருத்தம் என்பது முதலில் மக்களின் அரசியல் சித்தாந்தத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்டு இனவாத போக்கிற்கு முடிவுகட்டப்பட்டு புதியஅரசியல் கலாசாரம் மலர வேண்டும் அத்தகைய நிலைதோன்றாமல் எழுத்தளவு திருத்தங்கள் ஊடாக எதையும் சாதித்துவிட முடியாது என்பது வரலாற்றரசியலும் மேற்குறித்த ஆய்வும் வெளிப்படுத்தும் பாடமாகும்.

**முடிவுரை**

போரிற்கு பின்னர் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் வரைபு முயற்சிகள் இலங்கையின் நீடித்த சமாதானத்தை உருவாக்க முயற்சித்தாலும் அது நடைமுறை ரீதியின் அதன் எல்லைகளை அடைய முடியவில்லை. குறிப்பாக இவ்வரைபு முயற்சிகளில் உள்ளடக்கங்களில் காணப்படும் பலவீனம் அமுலாக்குவதில் காணப்படும் நெருக்கடி நிலை ஆகிய இரு விடயங்களும் கருது கோளை நிறுவுவதில் தாக்கத்தை செலுத்தியுள்ளது எனலாம்

**உசாத்துணை நூல்கள்**

1. உபகுழுக்களின் பரிந்துரை அறிக்கை (இலங்கை பாராளுமன்றம்) 2015 மே 05
2. வழிப்படுத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை ( இலங்கை பாராளுமன்றம்) 21 செப்டெம்பர் 2017 பக்கம் 1 பக்கம் 6
3. இலங்கை ஜன நாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு- பாராளுமன்ற செயலகம்
4. திரு நாவுக்கரசு. மு இலங்கை அரசியல் யாப்பு தமிழ் ஆய்வு மையம் 2016
5. திருநாவுக்கரசு பூகோள தேசியவாதம் தமிழ் ஆய்வு மையம் 2018